பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை 21.04.2024 கதிர் 165

## இனிது ரகசியம் அல்ல!

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகள் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புப் போன்று இலகுவானதாக இல்லை என்பது தொடர்பில் கொழும்பில் ஆட்சியாளர்கள் பரபரப்பாக உள்ளனர். அவர்கள் நினைத்தபடி காரியங்கள் எதுவும் நடக்கவில்லை என்பதுதான் பிரச்சினை. தொடக்கத்தில் எல்லோருமே இலங்கையுடன் கனிவாகத்தான் நடந்துகொண்டார்கள், பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவர உதவுவதற்கான ஆர்வத்தோடு இருந்தார்கள். ஆனால் பின்னர் அதற்குள்ளும் புவிசார் அரசியல் நுழைந்து எல்லாவற்றையும் சிக்கலாக்கிவிட்டது. அதற்குப் பிரதான காரணம் சீனா.

சீனாவிற்கான கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை நிறுத்தி வைப்பதற்கான சலுகைக் காலம் ஏப்ரல் 12 முடிவடைந்தது. இந்தப் பத்தியில் ஏற்கனவே அது பற்றி விரிவாகத் தெரிவித்திருந்தேன் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அதன்படி, கடந்த இலங்கை, இந்தக் கடனைத் திருப்பிச் ☞ 2

## செம்மணியில் மைதானம் அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு

செம்மணியில் முன்னர் உப்பளம் இருந்த பகுதியில் சர்வதேசத் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான பகீரத முயற்சியில் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே செம்மணியில் கட்டுமானங்களை மேற்கொள்வதற்குப் பல்வேறு தரப்பினராலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது வடக்கு மாகாணசபை அவற்றை நிராகரித்திருந்தது.

தற்போது வடக்கு மாகாணசபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் செம்மணியில் சர்வதேசத் தரத்தில் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் சாதக பாதகங்களை ஆராயாது முடுக்கி விடப்பட்டுள்ளன.

செம்மணியில் இத் துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அயற்பிரதேசங்கள் மாரியில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும், கோடையில் கடும் நீர்ப்பஞ்சத்துக்கு ஆளாகும் அபாயமும் நேரிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

செம்மணியில் சர்வதேசத் தரத்திலான துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கான முயற்சிகள் ☞ 2

## மன்னார் சர்வதேசத்துக்கான வாசல்படி

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

மன்னார் சர்வதேசத்துக்கான இலங்கையின் வாசல்படி என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மன்னரில் நேற்று நடைபெற்ற நடமாடும் சேவையின் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் என்பது சர்வதேசத்துடன் தொடர்புபடுத்தும் பூமியாகும். இது சர்வதேசத்துக்கான வசல்படியாக அமைந்துள்ளது. இதனை சரியாக புரிந்து கொண்டு எதிர்கால அபிவிருத்திக்காச் ☞ 2

## கடும் வெப்பத்தை தாங்க முடியாது வயலில் வேலை செய்தவர் இறப்பு

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி குளத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார். கடும் வெப்பத்தைத் தாங்க முடியாமலேயே அவர் உயிரிழந்தார் என்று கருதப்படுகின்றது. சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

மூதூர்-பாலத்தடிச்சேனை கிராமத்தில் வசித்துவரும் 3 பிள்ளைகளின் தந்தையான சூரியமூர்த்தி சுதாகரன் (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

பெரியவெளி குளத்து வயலில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மதியமளவில் மயக்கமுற்று விழுந்தார் ☞ 2

## தமிழ் பொது வேட்பாளர் முயற்சி பயனற்றது

### அமைச்சர் டக்ளஸ் கருத்து

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்க தமிழ் கட்சிகள் எடுக்கும் முயற்சி என்பது பயனற்றது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்தந அமைச்சர், மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்ட்டார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்வைக்கப்படும் தமிழ் பொது வேட்பாளர் விடயத்திலும் எமது மக்கள் இனியொருதடவை தோல்வியுற இடமளிக்கக் கூடாது.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் என்பது பயனற்ற ஒரு விடயம்.

தற்போதைய நிலையில் தென்னிலங்கையில் போட்டியிடும் ☞ 2

# நீதியை மறுதலிக்கும் செயல்களை பகுத்தறிவுடன் நோக்க வலியுறுத்து

### பேராயர் மல்க்கம் ரஞ்சித்துக்கு ஆசிய மனித உரிமைகள் குழு அழுத்தம்

உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல்கள் தொடர்பில் மாத்திரமன்றி, இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவதை மறுதலிப்பதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் உள்ளடங்கலாக இலங்கை ஆளும்தரப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் பகுத்தறிவுடன் நோக்குமாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு பேராயர் ☞ 2

## நுண் நிதிக் கடன்களில் இருந்து பெண்களைக் காக்கத் திட்டம்

### ஐ.ம.சக்தி ஆட்சியில் வரும் என்கிறார் சஜித்

நுண் நிதிக் கடன்களில் இருந்து பெண்களைக் காக்கும் செயற்றிட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் ஏற்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் மாநாடு நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மட்டகளப்பு மாவட்டம் உட்பட நாடளாவிய ரீதியிலான பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்ட விசேட திட்டங்களை முன்னெடுப்பேன். ஏனைய மாவட்டங்களைப் போலவே மட்டக்களப்பு மாவட்ட பெண்களும் நுண் நிதி கடன் வசதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நுண் நிதி கடன் பொறியில் இருந்து பெண்களை விடுவிக்கும் விசேட திட்டங்களை எமது ஆட்சியில் முன்வைப்போம்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கீழ் 14 பிரதேச செயலகங்கள் ☞ 2

## முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ, தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான அனுமதி குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு வழங்கப்படவில்லையென கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட ☞ 2

## ராஜாங்க அமைச்சரின் நம்பிக்கை

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அனைத்துக்கடன் வழங்குநர்களுடனும் கொள்கை ரீதியான உடன்படிக்கையை எட்ட முடியுமென தாம் நம்புகிறார் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் அமர்வின் சமகாலத்தில் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலியே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் மிகக் குறைந்த வரி விதிக்கும் நாடுகளில் ஒன்றாக நாங்கள் பெயரிடப்பட்டுள்ளோம். ஆனால் இந்தத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் நாங்கள் ☞ 10

## இருவேறு சம்பவங்களில் மட்டக்களப்பில் 2 பேர் சாவு

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று மாலை வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் எனவும், மற்றையவர் முதலைக் கடிக்கு இலக்காகி உயிழந்தார் எனவும் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரது சடலங்களும் வாழைச்சேனை ஆதாரவைத்திய சாலையில் வைக்கப்பட்டு உடற்கூறாய்வுகளின் பின்னர் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தார்.

பிறைந்துறைச்சேனை வாழைச்சேனையில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்ட நபர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்தர்க்கம் காரணமாக ஒருவர் கூரிய ஆயுதத்தினால் நெஞ்சுப்பகுதியில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள் ☞ 2

## கடன் ஸ்திர நிலையை எட்ட பாரிஸ் கழகம் ஒத்துழைக்கும்

நாட்டில் கடன் ஸ்திரநிலையை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக பாரிஸ் கழகம் மீண்டும் தெரிவித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் பாரிஸ் கழகத்ஞீன் இணைத் தலைவர் வில்லியம் ☞ 2

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்கான

## நீதி மறுப்பைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி பெற்றுக் கொடுக்கப் படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று பிற்பகல் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் ☞ 2

## மு.காவுடனான இணைவு சாத்தியமாகப்போவதில்லை

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அறிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்படுவது சாத்தியமில்லை என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

பொத்துவிலில் நடைபெற்ற ☞ 2

## இனி இது .....

செலுத்துவதற்கான சலுகைக் காலத்தை சீனா மீண்டும் நீட்டிப்பதற்கான நிகழ்தகவு குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருந்தேன். ஏப்ரல் 12ஆம் திகதிக்குப் பிறகு சீனா தனது கடன் வசதியை நீட்டிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டபோது நான் சொன்னது 100 சதவீதம் சரி என்பது தெரியவந்தது. இந்த நிலையில், ஒப்பந்தத்தின்படி, ஏப்ரல் 18 முதல் இலங்கை சீனாவின் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கி இருக்கவேண்டும். ஆனால், சீனாவுக்கு அப்படி எந்தப் பணமும் செலுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அப்படி என்றால் இலங்கையால் மீண்டும் கடனைத் திருப்பி செலுத்தமுடியவில்லை என்று அர்த்தம்.

ஆளும் தரப்பு இவ்வளவு காலமும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி, அன்னியச்செலாவணிக் கையிருப்பு 5 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளது. இப்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி இல்லை. டொலர்களும்கிடைக்கும்என்றார்கள். அப்படியானால்கடனைஅடைப்பதில் அரசுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லைத்தானே!நெருக்கடிஇல்லை என்றால் கடனை அடைக்க அரசு உழைக்க வேண்டும். ஆனால், ஆளும் தரப்பு எவ்வளவுதான் தற்பெருமைஅடித்துக்கொண்டாலும் சீனக் கடன் தவணையை ஆளும் தரப்பால் செலுத்தமுடியவில்லை என்பதே உண்மை.

இதற்கிடையில்

இந்த நிலையில் சீனாவில் மிகவும் அதிகாரம் மிக்க பதவியை வகிக்கும்நபர் ஒருவர் ஏப்ரல் 23ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். அவரதுபெயர்சன்ஹையான். அவர் சீனக்கம்யூனிஸ்ட்ஆட்சியில்துணை அமைச்சராகவும், சீன மத்திய குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட இராஜதந்திரியாகவும் உள்ளார். கடந்த ஆண்டு வரை சிங்கப்பூருக்கான சீனத் தூதராகப் பணியாற்றிய அவர், பொருளாதார நெருக்கடியின் போது மிகவும் தீர்க்கமான பங்கை வகித்தவர் என்றும் அறியப்படுகிறார்.

ஏப்ரல் 23 இலங்கைக்கான வருகையின்போது, ஆளும் தரப்பின் உயர்மட்ட அதிகாரிகளை அவர் சந்திக்கவுள்ளார், அதில் சீனக் கடனைத் திருப்பிச் செலுத்துவது பற்றிய விவகாரமும் முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளது. மேலும் சீனக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைய அனுமதிக்கப்படாத நிலையிலும், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நெருக்கடியிலும் சிக்கியுள்ள வேளையில் அவர் இலங்கை வருகிறார். விளைவுகள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை இப்போதைக்குக் கூறமுடியாது.

இருந்தாலும் ஆளும் தரப்பும் ஆட்சியாளர்களும் விரும்புவதைப் போன்று தேர்தலுக்கு முன்னர் தமது சாதனை என்றுகூறி கொடிபிடிப்பதற்கு உரிய பெரும் நகர்வுகள் எவையும் வெளிநாட்டுக் கடன் விடயத்தில் இருக்காது என்றே தெரிகின்றது.

ரணிலுக்கு தொடக்கம் நன்றாக இருந்தாலும் முடிவு சவாலாகத்தான் இருக்கும் போலுள்ளது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## நீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடமும், கத்தோலிக்க ஆயர்கள் பேரவையிடமும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து ஹொங்கொங் நாட்டைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி பாஸில் பெர்னாண்டோவினால் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் திறந்த கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு நீங்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துடனும், பாதிக்கப்பட்ட தரப்பினரின் குடும்பத்தாருடனும், மிகமோசமான இக்குற்றத்தின் விளைவாக துயரத்துக்குள்ளான கத்தோலிக்க சமூகம் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த இலங்கை மக்களுடனும் எமது உடனிற்பை வெளிப்படுத்துகின்றோம்.

உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியிலும், நீதிக்கான கோரிக்கையை செவிமடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. இவ்விடயத்தில் உங்களது பதற்றத்தை நாம் புரிந்துகொள்கின்றோம்.

அதேவேளை இக்குற்றம் தொடர்பில் மாத்திரமன்றி, இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவதை மறுதலிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பகுத்தறிவுடன் நோக்குமாறு உங்களிடம் வலியுறுத்துகின்றோம்.

இக்குற்றம் மற்றும் இதற்குரிய நீதி மறுதலிக்கப்படுவதன் பின்னணியில் வேறுபல முக்கிய விடயங்கள் பிணைந்திருப்பது தற்போது தெள;ளத்தெளிவாகப் புலப்பட்டிருக்கும் நிலையில், இது ஒட்டுமொத்த நாட்டுமக்களினதும் நலனில்பாதிப்பைஏற்படுத்தியுள்ளது.

இப்படுகொலையுடனும் (உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல்), அதன்பின்னரானநிலைவரத்துடனும் தொடர்புடைய சகல கோணங்களையும் ஆராய்ந்த மனித உரிமைகள் அமைப்பு என்ற ரீதியிலும், இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் சட்ட ஆட்சி சீர்குலைவைத் தொடர்ந்து அவதானிப்போர் என்ற அடிப்படையிலும், உடனடியாகக் அவதானம் செலுத்தப்படவேண்டிய இந்த சமூகவியல் சீர்குலைவை உங்களது கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

அதற்கமைய இவ்விடயத்தில் சில உடனடி மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும், அவற்றை முழுமையாக அடைந்துகொள்வதற்கு நீங்கள் உடனிற்கவேண்டும் எனவும் கருதுகின்றோம். அத்தோடு மிகமோசமான இந்நிலைவரத்தைக் கையாள்வதற்கு நீங்கள் ஏனைய மதங்களைச் சார்ந்தோர் மற்றும் நன்நோக்குடைய மக்களின் ஆதரவையும் கோரவேண்டும்.

அதன்படி, நாட்டில் முறையான சட்டஅமுலாக்கத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதனை அடைந்துகொள்வதற்குரிய அரசியல் ரீதியான தன்முனைப்பையும், இயலுமையையும் அதிகாரமுடையோர் கொண்டிருக்கவேண்டும். பிரச்சினையின் ஓரங்கமாக இருக்கும் தலைமைத்துவத்தில் மாற்றங்களை செய்து, நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்பைக் கொண்டிருப்போரிடம் அந்தப் பொறுப்பை வழங்குவதன் மூலம் இதனைச் செய்யலாம்

அடுத்ததாக குற்றவியல் விசாரணைப்பிரிவின் நடவடிக்கைகளை மீள் ஒருங்கிணைப்புச் செய்யவேண்டும். அதனூடாக இக்கட்டமைப்புக்குள் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிழைகளை சீரமைக்கலாம். அதுமாத்திரமன்றி புலனாய்வுப்பிரிவினர்மீது சுமத்தப்பட்டிருக்கும் மிகமோசமான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உரியவாறான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் எதிர்மறை நிலைப்பாட்டை மாற்றியமைப்பதற்கு ஏதுவான நியாயமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். நீதிமன்றக்கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைப்பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவுத:

செம்மணி உப்பளப்பகுதி குடாநாட்டின் பிரதான கடல் நீரேரிகளில் ஒன்றான உப்பாற்றுக் கடல் நீரேரியை அண்டிய தாழ்வான ஈரநிலம் ஆகும். வெளிப்பார்வைக்கு முக்கியத்துவமற்ற வெட்டவெளியாகத் தென்படும் இப்பகுதி சூழலியல் ரீதியாக இன்றியமையாத பங்களிப்புகளை வழங்கிவருகிறது. மாரியில் சுற்றயல் கிராமங்களில் இருந்துவரும் வெள்ள நீரைத்தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தைப் பேணுவதோடு, நிலம் உவராவதையும் தடுக்கிறது.

கூடவே, மேலதிக நீரைக் குடாநாட்டின் இன்னுமொரு கடல்நீரேரியான யாழ்ப்பாணக் கடல் நீரேரிவழியாகக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கவும் செய்கிறது.

அபிவிருத்தி முதலீட்டாளர்களின் வசதிகளையும் நலன்களையும் மாத்திரமே கருத்திற் கொள்வதாயின் அது நிலைபேறானதாக ஒருபோதும் அமையாது. அபிவிருத்தியில் சுற்றுச்சூழலினதும, அது சார்ந்த சமூகத்தினதும், நலன்கள் முன்னுரிமை பெறும்போதே அது நீடித்த - நிலையான - அபிவிருத்தியாக அமையும்.

அந்த வகையில் யாழ் நகரின் நுழைவாசல் என்பதற்காக மாத்திரமே செம்மணியில் துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கு முற்படுவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. இதனை இதுவரையில் அபிவிருத்திகள் எதனையும் காணாத தீவகத்தின் பகுதிகளில் ஒன்றில் நிறுவுவதே சாலச்சிறந்தது ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

## நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது,பொதுமக்களிடம்கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இருந்து நேற்று மாலை பேரணியொன்று ஆரம்பமானது. கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனைகளின் பின்னர் பேரணி ஆரம்பமானது. கொச்சிக்கடை தேவாலயத்தில் ஆரம்மான பேரணி மோதர, வத்தளை, ஜா-எல, கட்டுநாயக்க, நீர்கொழும்பு ஊடாக புனித செபஸ்டியன் தேவாலயம் வரை செல்லவுள்ளது. அங்கு இன்று காலை விசேட ஆராதானைகளும் அஞ்சலியும் நடைபெறவுள்ளது.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட வேண்டும். இந்து சமுத்திரத்தில் மன்னாருக்குதற்போது முக்கியமான இடம்கிடைத்து வருகின்றது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்பது மன்னாருக்கு மேலதிகமாக கிடைக்கும் விடயம் மாத்திரமே.

அயல்நாடான இந்தியாவுடன் நாம் காலங்காலமாக பேசப்படும் சேதுசமுத்திரத்திட்டமே மிகவும் முக்கியமானதாக உள்ளது. அத்துடன் இந்தியாவுடன் பாலம் அமைத்து தொடர்பு படுவதோடு, மன்னார் துறைமுகத்தினை மீளமைத்து படகு சேவையை ஆரம்பிப்பதும் முக்கியமானதாகும்.

பொருட்கள்சேவைகளைபரிமாற்றுவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இவை மன்னரின் ஊடாக நாம் மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ள விடயங்களாகும். இதற்கு இந்திய எதிர்ப்புதரப்புக்களிடமிருந்துஎதிர்ப்புக்கள் வரலாம். ஆனால் கடந்த காலத்தில் இந்தியாவை எதிர்த்தவர்கள் தற்போது அங்குசென்றுவருகின்றார்கள் ஆகவே நாம் இந்திய எதிஜுப்புக்களுக்காக அதனை கைவிடவேண்டியதில்லை. இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாயற்ற வேண்டும் மன்னார் சர்வதேசசந்தையாகதிகழ்வதற்கான பயணத்தினை நாம் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## நுண் நிதிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நளின்பண்டாரகடந்தநல்லாட்சி ஆளும் தரப்பில் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களையும் மையமாகக் கொண்டு ஏற்றுமதி மையங்களை ஆரம்பித்தார். அந்த திட்டத்தை நாம் எமது ஆட்சியில் மீண்டும் முன்தொடர்வோம்.

நுண், சிறிய, நடுத்தர புதிய தொழில் முனைவோரை உருவாக்கும் திட்டத்தை முன்னெடுக்க இருக்கிறோம். எமது 10 இலட்சம் புதிய தொழில் முனைவோரை உருவாக்கும் திட்டத்தில் பெண்களுக்கு கூடிய முக்கியத்துவதும் முன்னுரிமையும் வழங்க எதிர்பார்கிறோம்.

பெண்களுக்கானஉரிமை,சமூக உரிமை மற்றும் பெண்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுப்போம். நான் ஜனாதிபதியாக வந்தால் பெண்களுக்கான விசேட ஜனாதிபதி செயலணியொன்றினைஸ்தாபிப்பேன். இலங்கையில் 52 % அதிகமாக பெண்கள் இருக்கின்றனர்.

இதுஅதிகஎண்ணிக்கையாகும். உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரமே பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு இருக்கிறது. எனது ஆட்சியில் மாகாண சபைகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீட்டை வழங்குவேன் என உத்தரவாதம் வழங்குகிறேன். இந்நாட்டுள்ள 314 பிரதேச செயலகங்களிலும் பெண்களைவலுவூட்டக்கூடியமத்திய நிலையங்களை உருவாக்க நான் தயாராக இருக்கிறேன். அவ்வாறு இந்த திட்டத்தை ஆரம்பிக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நான் மீண்டும் வருவேன். மட்டக்களப்பு தொடர்பில் பேசும் போது குறிப்பாக மயிலத்தமடு மேய்ச்சல் தரை தொடர்பாக பேச வேண்டும். பல ஆட்சியாளர்கள் இங்குவருகிறார்கள், இது குறித்து பேசுகிறார்கள். இந்த வருட இறுதிக்குள் எமது ஆட்சியில் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருவேன் என உத்தரவாதம் அளிக்கின்றேன்.

## கடன் ஸ்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின்போதே மேற்படி விஜடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டன் நகரில் இடம்பெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அரையாண்டு கூட்டத்தின் போது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள்குழுவுடனும்,ஏனைய தரப்பினருடனும்மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன.

பிரான்ஸின் பல்தரப்பு செயற்பாடுகள் சார்ந்த வர்த்தக மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள் திணைக்களத்தின் உதவி செயலாளராகவும்வில்லியம்ரூஸ்கடமையாற்றுகின்றமை குறிப்பி டத்தக்கது.

இதனிடையே, ஒபெக்நிதியத்தின் தலைவர் அப்துல் ஹமீட் அல் கலீஃபாவையும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சந்தித்துள்ளார். இலங்கையின் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைசெயற்றிட்டங்களுக்காக நிதி வசதிகளை வழங்கஎதிர்பார்த்துள்ளதாக, அப்துல் ஹமீட் அல் கலீஃபா இதன்போது தெரிவித்துள்ளார்.

தற்போதுமுன்னெடுக்கப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசாங்கத்தினால் பின்பற்றப்படும் சர்வதேசரீதியில்ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைபாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவரமைப்பின் பிரதி நிர்வாகி அஞ்சலி கௌர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இடையிலான சந்திப்பும் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முறைப்பாடுகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினிவெள்ளிக்கிழமை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் நேற்று வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் தெரிவித்த கருத்து தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளரிடம் கேள்வியெழுப்பப்பட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''எமக்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் எம்மால் முடிந்த அனைத்தையும் மேற்கொண்டுள்ளோம். ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் சட்டமா அதிபர் ஆரம்பம் முதலே தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார். பொலிஸாருக்கு முறைப்பாடுகள்கிடைக்கும்பட்சத்தில், அவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, தேவையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மு.காவுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் சந்திப்பின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தகாலத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்டோம். அந்தக் கட்சிக்குநெருக்கமான தராசு சின்னத்தில் தான் போட்டியிட்டோம். அதன் மூலமாக வெற்றிபெற்ற உறுப்பினர் முறைதவறி நடந்துகொள்கின்றபோது முஸ்லிம் காங்கிரஸ்; அமைதி காத்தது. தேர்தலுக்கு முன்னர் ஒருவாறும் தேர்தலின்பின்னர்வேறொருவாறும் செயற்பட முயாது. ஆவ்விதமான கட்சியுடன் நாம் எப்படி இணைந்து செயற்படுவது என்பது தொடர்பில் பாரிய கேள்விகள் உள்ளன.

தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக ஒருகதைளையும் அதன் பின்னர் அதற்கு எதிர்மாறாக நடைபெறுகின்றநிலைமைகளையும் மு.கா.கொண்டிருக்கின்ற நிலையில் அதனை எவ்வாறு அனுசரிப்பது என்றகேள்விஎமக்குள்ளது என்றார்.

## இருவேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

சம்பவத்தில் 43 வயதுடைய குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். தாக்குதலை மேற்கொண்டவரை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே போன்று வழக்கம் போல முறுத்தானையில் உள்ள வெத்திலை போட்ட மடு குளப் பகுதியில் கட்டு வலை கட்டி மீன் பிடியில் ஈடுபட்டவர் முதலைக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான மூ.மயில்வாகனம் வயது (67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி இருவரது சடலங்களின் உடற் கூற்றாய்வினை சுகாதார வைத்திய அதிகாரி எச்.எம்.எம். முஸ்தபா மேற்கொண்டிருந்தார்.

இறப்பு விசாரணைகளை கோறளைப்பற்று திடீர் இறப்பு விசாரணைஅதிகாரிஅ.ரமேஸ்ஆனந் மேற்கொண்டிருந்தார்.

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தரப்பினருடன் இணக்கத்தை ஏற்படுத்தி அவர்களிடம் ஆதரவு வழங்கி அதனூடாக பேரம் பேசும் சக்தியாக நாம் உருவாக வேண்டும்.

முன்பதாக கடந்தகால தமிழ் அரசியல் தலைவர்களும் போராட்ட அமைப்புகளும் தத்தமது சுயநல தேவைகளுக்காக மற்றவரை தடம் போட்டு வீழ்த்த வேண்டும் என்ற நிலையில் இருந்து முன்னெடுத்த பொறிமுறைகள் அனைத்தும் தோல்வியிலேயே கண்டுள்ளது.

இதனால் ஒட்டுமொத்த தமிழினமும் சொல்லொணா இன்னல்களையும் எதிர்கொண்டுவிட்டனர். ஆனால் எமது நடவடிக்கைகள் தமிழ் மக்கள் தோல்விகாணக்கூடாது என்றநிலையிலிருந்தே முன்னெடுக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது அதற்கான கள நிலைமைகளை உருவாக்க சாதுரிதமான வழிமுறைகளும் எம்மிடம் உள்ளது.

எனவே அதனை மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறை மாவட்ட பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணி முதலிடம்



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்ட பெண்கள் போட்டிகளில் காரைதீவு பிரதேச செயலக அணி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்தது. இப் போட்டி அம்பாறையில் இடம்பெற்றது. சிறப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் காரைதீவு பிரதேச செயலகம் வெற்றிபெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டது. இரண்டாமிடத்தை அம்பாறை பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது. (05)

# கல்முனை வலயத்தில் புதிய நியமனங்கள்

(நூருல் ஹுதா உமர்)



கல்முனை கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கல்வி முகாமைத்துவத்திற்கான பதில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் எம்.எச்..றியாஸா நியமனம் பெற்றுள்ளார்.

காரைதீவு கோட்டத்திற்கான கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.சஞ்ஜீவன், கல்முனை கோட்டத்திற்கான கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் ஆகியோருக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன. கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் ஆரம்பப் பிரிவு கல்வி அபிவிருத்திக்கான பணிப்பாளராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

அதே வேளை எம்.எல்.எம்.முதர்றிஸ் உடற்கல்விக்கான உதவிக் கல்விப்பணிப்பாளருக்கான கடிதத்தையும் பெற்றுக் கொண்டார்.

நியமனக் கடிதங்கள் அனைத்தும் வெள்ளிக்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# 17 ஆமைகளைக் கடத்திய இருவர் காத்தான்குடி பொலிஸாரால் கைது





மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி தரிசனம் பாடசாலை வீதியில் உள்ள வீடொன்றில் ஆமை இறைச்சி மற்றும் 17 ஆமைகளை காத்தான்குடி பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை, இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி கஜநாயக்க தெரிவித்தார்.

திருகோணமலையைச் சேர்ந்த இரண்டு நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட ஆமைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளத்துடன், சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)





# இலங்கை நூலக சங்கத்தின் தேசிய ஆய்வு மாநாடு

(நூருல் ஹுதா உமர்)



இலங்கை நூலக சங்கத்தின் 18 ஆவது தேசிய ஆய்வு மாநாடு, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில், நூலக சங்க ஆய்வுக்குழுவின் ஒருங்கிணைப்பாளரும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகருமாகிய கலாநிதி முஹம்மட் மஜீட் மஸ்றூபா தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இலங்கை நூலக சங்கம் 1024 அங்கத்தவர்களைக் கொண்ட, நூலகர்களுக்கான தொழில் முறை தராதரங்களைப் பேணுகின்ற, நூலகவியல் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் கற்கை நெறிகளை நடத்துகின்ற ஒரு தொழில்சார் சங்கமாகும். இந்நிறுவனம் தனது வருடாந்த மாநாடுகளை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நடத்தி வருகின்றது. இம்முறை 18 ஆவது தேசிய ஆய்வு மாநாடு 'நூலகங்கள் மற்றும் சமூகத்தின் இணைப்பு: சமூக விரிவாக்கல் சேவைகள் மூலம் பிணைப்பினை வலுப்படுத்தல்" எனும் தலைப்பின் கீழ் இடம்பெற்றது.

இவ்வருடம் வித்தியாசமான முறையில் இலங்கையின் தேசிய மொழிகளை முதன்மைப்படுத்தி மும்மொழிகளிலும் சிங்கள மொழி, தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி மூலம் இவ் ஆய்வு மாநாடு நடத்தப்படுகின்றது. இலங்கை நூலக சங்கத்தின் தற்போதைய தலைவர் பிருத்தி லியனகே மற்றும் முன்னாள் தலைவர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ ஆகியோரின் நெறிப்படுத்தல்களில் இவ் ஆய்வு அமர்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸிலும், முதன்மை பேச்சாளராக பேராதனை பல்கலைக்கழக நூலகர் ஆர். மகேஸ்வரனும், கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் என். மணிவண்ணனும், கிழக்கு பல்கலைக்கழக நூலகர் கலாநிதி டபிள் யூ.ஜெ. ஜெயராஜும், தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத்தும் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். கிழக்கு பல்கலைக்கழக பிரதி நூலகர் எஸ். சாந்தஷரூபன் இணைத் தலைவராக பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் முதன்மை அமர்வின் தலைமையை கலாநிதி திருமதி கே. சந்திரசேகர் யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் நூலகர் அவர்கள் ஏற்றிருந்தார். மாநாட்டின் செயலாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி ஜெனனும், இணைச் செயலாளராக ஏ.எல்.எம். முஸ்தாக், கல்முனை பொது நூலகரும் பங்கேற்கின்றனர்.

இம்மாநாட்டில் பொது நூலகர்கள், பாடசாலை நூலகர்கள், விசேட நூலகர்கள் மற்றும் பல்கலைக்கழக நூலகர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். அந்த வகையில் இம் முறை தமிழ்மொழி மூலம் கிழக்கு மாகாணத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் குறித்த நிகழ்வு இடம்பெற்றது வரலாற்று சிறப்புமிக்க ஒரு நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வு மாநாடு இரண்டு கட்ட அமர்வுகளாக இடம்பெறுகின்றது. முதல் அமர்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட, தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன் இரண்டாவது அமர்வு ஏப்ரல் 26 ஆம் திகதி கம்பஹா பொது நூலகத்தில் சிங்கள மொழி மூலம் நடைபெற உள்ளது.

இம்மாநாட்டுக்கு பல்கலைக்கழக நூலகர்கள், பீடாதிபதிகள், நிருவாக உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள், செயலாளர்கள், இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொழில்சார் நூலக வல்லுநர்கள், நூலக பணியாளர்கள் மற்றும் நூலகவியலைக் கற்கின்ற மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)



# கோழி இறைச்சி விலை குறைப்பு

பண்டிகை காலத்தின் பின்னர் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் நாள்களில் கோழி இறைச்சியின் விலை மேலும் குறைக்கப்படும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாரஹென்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் வெள்ளிக்கிழமை ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கறி கோழி இறைச்சி 900 ரூபாவாகவும் ஒரு கிலோ ஆட்டு இறைச்சி 3,300 ரூபாவாகவும் ஒரு கிலோ மாட்டிறைச்சி 2400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (05)

# பொலிஸாரிடமிருந்து தப்பிச்செல்ல முயன்ற நபர் தண்ணீர் நிரம்பிய கற்குவாரியில் வீழ்ந்து இறப்பு

கொட்டாவ, ருக்மலே பகுதியில் சில நபர்களுடன் இணைந்து பணத்துக்கு சூதாடிக் கொண்டிருந்த ஒருவர் பொலிஸாரிடமிருந்து தப்பிச்செல்ல முயன்ற போது அருகில் இருந்த தண்ணீர் நிரம்பிய கற்குவாரியொன்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபராவார்.

இவர், சில நபர்களுடன் இணைந்து சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், அப்பகுதிக்கு சுற்றிவளைப்புக்காக சென்றிருந்த பொலிஸ் குழுவொன்று சந்தேக நபர்களைப் பிடிப்பதற்கு முயன்றுள்ளது.

இதன்போது இவர் ,பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்வதற்காக மூன்று நபர்களுடன் அருகில் இருந்த 30 அடி ஆழமான தண்ணீர் நிரம்பிய கற்குவாரிக்குள் குதித்துள்ளார்.

இந்த கற்குவாரியில் குதித்த ஏனைய மூவரும் பொலிஸாரிடமிருந்து தப்பித்து வீடு திரும்பியுள்ள நிலையில் உயிரிழந்தவர் மாத்திரம் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில் அப்பிரதேசவாசிகள் கற்குவாரியில் நிரம்பிய நீரை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது குழியினுள் இருந்து உயிரிழந்தவரது சடலம் கண்டெடுக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொலிஸ், படைத்துறையில் மறுசீரமைப்பு உடனடி அவசியம்

போதைப்பொருள்கடத்தல்காரர்கள், வியாபாரிகள், நுகர்வோர் என அனைவருக்கு எதிராகவும் காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் 'யுக்திய' கைது நடவடிக்கையில் இதுவரையில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஆளும் தரப்பு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்டவர்களில் குற்றவியல் சந்தேகநபர்கள், பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தோர், தேடப்பட்டுவந்த சந்தேகநபர்கள் எனப் பலரும்கூட அடக்கம்.

இவர்கள் மத்தியில் போதைப் பொருள் கடத்தலுடனும் நுகர்வுடனும் தொடர்புபட்டவர்கள் என்கிற குற்றச்சாட்டின் கீழ் காவல்துறையினரும் (பொலிஸார்) முப்படைகளைச்சேர்ந்தவர்களும்கூடக் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்படி ஒருவர் இருவர் அல்லர் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கஞ்சா, ஐஸ், ஹெரோயின் என்று விதம்விதமாகப் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். இத்தகைய படையினர்மீது வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு அவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காவல்துறையினர் மத்தியிலும் படையினர் மத்தியிலும் போதைப் பொருள் பயன்பாடும் அந்த வர்த்தகத்திற்கு உடன்பட்டுப் போகும் போக்கும் அதிகம் இருப்பதற்கு இந்தக் கைதுகள் சாட்சிகளாக இருக்கின்றன. காவல்துறையினரிடமும் படையினரிடமும் மதுப் பயன்பாடு அதீதமாக இருப்பது வெளிப்படை. இது அனுமதிக்கப்பட்டும் இருக்கின்றது. காவல்துறையினர் பொது மக்களிடம் இருந்து லஞ்சமாக மதுப் புட்டிகளைப் பெறுவது சாதாரணமாக நடந்தேறுகின்றது. அதன் நீட்சியாக இன்று அவர்கள் போதைப் பொருள்களுக்கும் பழக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் அடிமையாகி இருக்கின்றார்கள் என்பதும் வெளிப்படுகின்றது. அதுமட்டுமன்றி சிலர் அதையும் கடந்து போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு உதவுவதுடன் அதில் தாமும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கட்டுக்கோப்பான துறைகளான காவல்துறையும் படைத்துறையும்கூட இவ்வளவு மோசமாகப் போதையின் தாக்கத்திற்கு உள்ளாகி இருப்பது அந்தத் துறைகளில் ஊழல் மலிவதற்குக் காரணமாகவும்வாய்ப்பாகவும்அமைந்துவிடுகின்றது. இந்தப் போக்கு அனுமதிக்க முடியாதது. உடனடியாக நிறுத்தப்படவேண்டியது. அதற்கு காவல்துறையும் படைத்துறையும் உடனடியாக மறுசீரமைக்கப்படவேண்டியது அவசியம். போதைப் பொருள்களுடன் தொடர்புடைய படைத்துறை சார்ந்தவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அவர்கள் மறுவாழ்வுக்குஉட்படுத்தப்படவும்வேண்டும். அதேநேரம் காவல்துறையினர் மத்தியில் இருக்கும் அதீத மதுப் போதைப் பழக்கமும் தடுத்து நிறுத்தப்படவேண்டும். குடிநோயாளிகளாகி இருப்போர் அதிலிருந்து மீட்கப்படுவதுடன்அவர்கள்பணிநீக்கம்செய்யப்படவும் வேண்டும்.

ஆளும் தரப்பினர் இவை தொடர்பில் அதிக கவனம் எடுத்து, நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதுடன் இறுக்கவேண்டியதும் அவசியம். அப்போதுதான் இலங்கையின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.



# மீண்டும் மோடி சவாலும் சாத்தியமும்

யோகேந்திர ஜாதவ்

மிகவும் 'அசாதாரண'மான இந்தக் கால கட்டத்தில் 'இயல்பான அரசிய'லுக்கு வலிமையுடன் திரும்பிவிட முடியுமா? மேற்கு உத்தர பிரதேசம், தெற்கு பஞ்சாப், வடக்கு ஹரியாணா, கிழக்கு ராஜஸ்தான் பகுதிகளில் ஐந்து நாள்கள் தொடர்ந்து காரில் பயணித்து 1,500 கிலோ மீற்றர் சென்று திரும்பிய பிறகு இந்தக் கேள்வியை எனக்குள் கேட்டுக்கொண்டேன்.

இந்தி பேசும் மாநிலங்களில் 2014, 2019 மக்களவைத் தேர்தல் காலத்தில் வீசிய 'பாஜக ஆதரவு அலை' இப்போதும் வீசுகிறதா? இந்தப் பொதுத் தேர்தலிலும் எதிர்க்கட்சிகள் பெருந்தோல்வியைச் சந்திக்கப் போகின்றனவா? இந்தக் கேள்விகளுக்கு விடை காண, தீவிர அரசியல் சிந்தனையுள்ள ஐவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம்.

நானூறுக்கும் மேற்பட்ட சாமானிய வாக்காளர்களை அவர்களுடைய வீடுகளில், வீதிகளில், கடைத்தெருக்களில் சந்தித்துப் பேசிய பிறகு கிடைத்த எளிதான – உறுதியான பதில் – 'இல்லை'.

மக்கள் அனைவருமே முக்கியத்துவம் தந்து பேசியது அன்றாட வாழ்வில் அவர்கள் சந்திக்கும் அதி முக்கியமான பிரச்சினைகளைப் பற்றித்தான். வாழ்வாதாரம் தொடர்பானவை, உள்ளூர் பிரச்சினைகள், இப்போது பதவியில் இருக்கும் உறுப்பினர் தொகுதிக்கே வருவதில்லை என்ற ஆதங்கம், சாதி - சமயப் பிணக்குகள், கோஷ்டி அரசியல் என்று பல. இவற்றையெல்லாம் மற்றவர்கள் அறியாமல் அடக்கவும் மறைக்கவும்தான் விரும்புவார் மோடி.

### மோடியின் கவர்ச்சியில் தேய்வு

எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு காலம் உண்டு என்று ராஜஸ்தான் மாநிலம் ஜுன்ஜுனுவில் தேர்தல் பணியில் இருந்த பொலிஸ்காரர் முணுமுணுத்தார். "கொரானா – கொரானா என்று தொடர்ந்து ஓராண்டாக எல்லோரும் அச்சப்பட்டார்கள், பிறகு அது படிப்படியாக தேய்ந்து நினைவிலிருந்தே இப்போது மறைந்துவிட்டது. மோடி மோடி என்ற இந்த மாயமந்திரமும் அப்படியே படிப்படியாக மறைந்துவிடும்" என்றார் சீருடை அணியாத, 30 வயது மதிக்கத்தக்க அந்த இளம் பொலிஸ்காரர்.

நாங்கள் போன இடங்களிலும் சந்தித்த மனிதர்களிடத்திலும் இந்த எண்ணமே எதிரொலிப்பதைக் கண்டோம்.

பொதுமக்களுடைய கண்களிலிருந்து மோடி மறைந்துவிடவில்லை - நெஞ்சங்களிலிருந்தும் நீங்கிவிடவில்லை ஆனால் பழைய கவர்ச்சி இல்லை. வாக்காளர்களிடம் நடத்தும் கருத்துக்கணிப்புகளில், "இப்போதிருக்கும் தலைவர்களில் பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் யார்?" என்று கேட்டால், மற்றவர்களைவிட அவருக்கு அதிகம் பேர் ஆதரவு தெரிவிப்பது நிச்சயம்.

மோடி மீது பித்தாக இருக்கும் அவருடைய தீவிர ஆதரவாளர்களையும் இப்பயணத்தில் சந்தித்தோம். நாங்கள் சென்ற இடங்களில் காணப்படும் பிரச்சினைகளை எல்லாம் மக்கள் மறக்க, அவருடைய உருவம் மட்டுமே போதாது என்பது புரிந்தது. அவர் மீதான கவர்ச்சி மங்கத் தொடங்கிவிட்டது, நீண்ட காலமாக அடக்கி வைக்கப்பட்டிருந்த பிரச்சினைகள் பெரிதாகத் தெரியத் தொடங்கிவிட்டன.

ஆட்சியில் இருப்பவர்கள், தற்காத்துக்கொள்ள வேண்டி சமாதானம் சொல்ல வேண்டிய பிரச்சினைகளுக்குக் குறைவே இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருப்பது மிக மிக வேதனை தரும் பிரச்சினையாகும். பாஜகவை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும் ஆதரவாளர்கள்கூட, புள்ளிவிவரங்களுடன் எதிர்கொள்ளும்போது பேச வார்த்தைகள் இல்லாமல் திணறுகிறார்கள்.

சீனாவை எல்லையிலிருந்து முட்டி மோதி வெளியேற்றினோம் என்று வீரம் பொங்க ஆதரவாளர்களிடையே பேசும்போது அவர்கள் கேட்டுப் பரவசமடைவார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் ஒவ்வொரு குடும்பத்தையும் அலைக்கழிக்கும்போது அதைப் போல கதைகளைப் பேசி கண்ணை கட்டிவிட முடியாது.

### விலைவாசி உயர்வு

விலைவாசி உயர்வு அடுத்த இடத்தைப் பிடிக்கிறது. பொது விநியோக முறை மூலம் கோதுமை, அரிசி போன்றவை கிடைக்கிறது என்று ஏழைகள் கூறினால்கூட, அது மட்டுமே அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருந்துவிடவில்லை (இதற்குக் காரணமான தேசிய உணவுப் பாது காப்புச் சட்டத்தை இயற்றியது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிதான் என்பதே பலருக்கும் நினைவில் இல்லை).

அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள இந்தப் பங்கீட்டு கோதுமை மட்டும் போதவில்லை என்பதே மக்களுடைய பொதுவான அங்கலாய்ப்பாக இருக்கிறது. விவசாயிகளுடைய பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்கவே இல்லை என்றே அனைவரும் கூறுகின்றனர். 'பிரதான் மந்திரி கிசான் நிதி' திட்டம் மூலம் ஆண்டுக்கு தரப்படும் ஷரூ.6,000, டீசல் - உரங்களின் விலை உயர்வைச் சமாளிக்கக்கூட போதவில்லை என்பதே அனைவருடைய குற்றச்சாட்டாகவும் இருக்கிறது.

இவைபோக ஏராளமான உள்ளூர் பிரச்சினைகள் வரிசை கட்டி நிற்கின்றன. வாய்க்கால் கட்டுவோம் என்றார்கள் வாய்க்கால் வரும் அறிகுறியே இல்லை, சாலை வசதிகளை மேம்படுத்துவோம் என்றார்கள் சாலைகள் எல்லாம் குண்டும் குழியுமாகத்தான் இருக்கின்றன, பயிர் விளைச்சல் பொய்த்தால் இழப்பீடு தரப்படும் என்றார்கள் அதிலும் ஏதும் தரவில்லை, மருத்துவச் செலவுக்கு சொந்தப் பணத்தைத்தான் ஏராளமாகச் செலவிட வேண்டியிருக்கிறது, எல்லா அரசு அலுவலகங்களிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்று துயரங்களை அடுக்கிக்கொண்டே செல்கிறார்கள்.

### மௌன ராமர்

அயோத்தி ராமர் கோயில் பற்றி நாங்கள் சந்தித்த யாரும் தாங்களாகவே பேசவில்லை. மோடியின் ஆதரவாளர்கள் மட்டும்தான் ராமர் கோயில் பற்றிப் பேசுகிறார்கள் அது மட்டுமல்லாமல், மோடியால் உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்திருக்கிறது என்கிறார்கள்.

காஷ்மீருக்கு தனி அந்தஸ்து தந்த அரசமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவு நீக்கப்பட்டதை பெரிய சாதனையாகக் கூறுகிறார்கள்.

இவர்கள் இப்படிப் புகழ்ந்து பேசும்போதே எதிர்க்குரல்களும் கூட்டத்திலிருந்து ஒலிக்கின்றன. "மக்களைக் கோவிலுக்குள் வலுக்கட்டாயமாகத் தள்ளுகிறார்கள், கோயிலில் இருக்க வேண்டிய தெய்வங்களை அரசியலுக்கு இழுத்துவருகிறார்கள்" என்று பழங்குடி இளைஞர் ஒருவர் கூறியது எங்களை ஈர்த்தது.

### சமூகங்களின் முடிவுகள்

மேற்கு உத்தர பிரதேசத்தில் ராஜபுத்திரர்கள் போர்க்கொடி தூக்கியிருப்பதை பாஜக தலைமை ஒரு வழியாகச் சமாளிக்கக்கூடும், ஆனால் ஹரியாணாவிலும் ராஜஸ்தானிலும் ஜாட்டுகள் மீண்டும் பாஜகவை ஆதரிக்க மாட்டார்கள் என்பது உறுதி. பஞ்சாபின் நகரப்பகுதிகளில் பாஜகவுக்கு சிறிது ஆதரவு கூடியிருந்தாலும் ராஜஸ்தான் ஹரியாணாவிலும் பட்டியல் இனத்தவர் ஆதரவை அது நிச்சயம் இழக்கும். அரசியல் விமர்சனத்துக்காக இதையெல்லாம் சொல்வதுபோலத்

(5ஆம் பக்கம் பார்க்க..)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொதி வழங்கல்





(சர்ஜூன் லாபீர்)

அண்மையில் வெள்ளத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட மக்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வெள்ளத்தால் பாதிப்புற்று தெரிவு செய்யப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கு உதவிப் பொதி வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். அஸாருத்தீன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்பாறை மாவட்ட செயலாளர் பிரதீப் தென்னக்கோன், முன்னாள் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம(நிதி) செயலாளரும், செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்பாறை மாவட்ட உயர் பீட உறுப்பினருமான ஐ.எம் ஹுசைன், சம்மாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகர்கள்,கிராம சேவகர்கள் மற்றும் செஞ்சிலுவை அமைப்பின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)

# மீண்டும் மோடி......

தோன்றும், பாஜகவுக்கான வழக்கமான எதிர்ப்புகள் இந்தத் தேர்தலில் மீண்டும் வலுத்து வருவதையே இவை காட்டுகின்றன.

**சர்வாதிகாரமா கோலோச்சுவது?**

நானூறு இடங்களுக்கு மேல் நிச்சயம் என்ற முழக்கத்துக்கு முற்றிலும் வேறுபட்டிருக்கிறது தேர்தல் களம். நாங்கள் நேரில் பார்த்து, கேட்டு, உணர்ந்தபடி வாக்குகள் பதிவாகி, முறையாக எண்ணப்பட்டு, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டால் - வாஜ்பாய் தலைமையில் இந்தியா ஒளிர்கிறது என்ற பரப்புரைக்குக் கிடைத்த முடிவுதான் - அதாவது படுதோல்விதான் பாஜகவுக்கு இந்தத் தேர்தலிலும் நிச்சயம் கிடைக்கும்.

போட்டியிடும் கட்சிகளுக்கு இடையில் பணபலம், அதிகார பலம், ஆள் பலம், ஊடக பலம் ஆகியவற்றில் சமமின்மை நிலவும் இந்த நிலையில்கூட, இந்தப் பகுதிகளில் 2019 தேர்தலில் கிடைத்த வெற்றி பாஜகவுக்கு நிச்சயம் கிடைக்காது.

ஆனால் நாம், 'சாதாரண காலத்தில் வாழவில்லை". நான் சொல்வது என்னவென்று மக்களுக்குப் புரிந்திருக்கும். கடந்த நாற்பதாண்டு கால அரசியல் அனுபவத்தில், 'சர்வாதிகாரம் - யதேச்சாதிகாரம்' என்ற வார்த்தைகளை பொதுமக்கள் பேசும் இடங்களில் இந்த அளவுக்கு நான் கேட்டதே இல்லை. தங்களுடைய முடிவுகளை கடைசி நேரத்தில் மாற்றிக்கொள்ளக்கூடிய வாக்காளர்கள் இதைப் பேசுவதில்லை, பாஜகவை தீவிரமாக எதிர்ப்பவர்கள் இதை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

மோடியை ஆதரிக்கும் ஊடகங்களைத் தவிர மற்ற ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டிருப்பதையும், எதிர்க்கட்சி ஆளும் அரசுகளைச் சீர்குலைப்பதையும், வலுக்கட்டாயமாக பிற கட்சிகளிலிருந்து நிர்வாகிகளை விலக வைப்பதையும், தில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலைக் கைதுசெய்ததையும் இந்தச் சர்வாதிகாரத்துக்கு நிரூபணங்களாக சுட்டிக்காட்டுகின்றனர். 'இடி' - 'சிபிஐ' போன்ற அரசு முகமைகளைத் தவறாகப் பயன்படுத்துவதையும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத் திரும்பிவிட்டால் எல்லா ஊழல்கறைகளையும் போக்கும் 'வாஷிங் மெஷி'னாக அது அபயம் தருவதையும் சாமானிய மக்கள் - கிராமங்களில்கூடப் பேசுகிறார்கள்.

இதற்கு உதாரணங்களை தேசிய அளவில் தேடாமல், உள்ளூரில் 'இடி-ஐடி' சோதனைகளுக்கு உள்ளான காங்கிரஸ் தலைவர்கள் பாஜகவில் சேர்ந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் இல்லாமல் தப்பியதைச் சுட்டிக்காட்டுகின்றனர். முதல் முறையாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மீது மக்களுக்கு சந்தேகம் அதிகமாகியிருக்கிறது. "நாம் ஒரு பொத்தானை அமுக்கினால் அது வேறொரு சின்னத்தில் போய் பதிகிறது" என்கிறார்கள்.

**தேர்தல் நன்கொடை பத்திரம்**

மக்களுக்குத் தெரிய வேண்டிய தேசிய செய்திகளும் அவர்கள் வரை சென்று சேருவதுமில்லை. நாம் சந்தித்தவர்களில் மிகச் சிலருக்குத்தான் தேர்தல் நன்கொடை பத்திரம் பற்றித் தெரிந்திருக்கிறது. இந்த நன்கொடை பாத்திரத்தை வாங்கி, பதிலுக்கு தொழில் நிறுவனங்கள் பெரும் சலுகைகள் குறித்து அவர்களில் பலருக்கும் தெரியவில்லை.

நாட்டுக்கு என்ன நேர்கிறது என்பதும் தங்களுக்கு அது எந்த வகையில் தொடர்புள்ளது என்பதும் மக்களுக்குத் தெரிவதே இல்லை. வெல்லும் குதிரை மீது பந்தயம் கட்டுவதுதான் மக்களுடைய இயல்பு. ஆனால், இந்த முறை தானோ, தன் குடும்பமோ, கிராமமோ பாஜகவுக்கு வாக்களிக்கப்போவதில்லை என்றே நாங்கள் சந்தித்தவர்களில் பெரும்பாலானவர்கள் அறிவித்தனர்.

இருந்தாலும், 'மீண்டும் வருவார் மோடி' என்ற முழக்கத்தைக் கேட்கிறேன். பாஜக தொண்டர்கள் இதை உரத்துச் சொல்லி, அற்ப திருப்தி அடைகிறார்கள். சில சமயம் தாங்கள் அடைய வேண்டிய வெற்றிக்காக இதைச் சொல்கின்றனர் பல வேளைகளில் அடைய முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில், கையறு நிலையில் முழங்குகின்றனர். 'அசாதாரண'மான காலங்களில் 'சாதாரண'மான முறையில் அரசியல் செய்வது அப்படியொன்றும் எளிதல்ல!

நன்றி: அருஞ்சொல்




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சிறுமியின் இறப்புக்கு நீதி கேட்டு தரணிக்குள மக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்



அண்மையில் வவுனியாவில் உயிரிழந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி வெள்ளிக்கிழமை தரணிக்குளம் கிராம மக்களால் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 17 ஆம் திகதி தரணிக்குளம் கிராமத்தில் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் 17 வயதுடைய சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருந்த நிலையில், வெள்ளிக்கிழமை இறுதி கிரியைகள் இடம்பெற இருந்த வேளை சிறுமியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து சிறுமியின் வீட்டிற்கு முன்பாக கிராம மக்கள் மற்றும் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அத்தோடு குறித்த சிறுமியின் மரணத்திற்கு சிறிய தந்தையாரே காரணம் எனவும் தெரிவித்து மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்ததுடன் மரணித்த சிறுமியின் வீட்டில் இருந்து பேரணியாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிஸ் நிலையத்தையும் முற்றுகையிட்டதுடன் வீதியை மறித்தும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதன் போது சிறுமியின் கொலைக்கு நீதி வேண்டும், பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வேண்டும், சதுமிதாவின் மரணத்திற்கு நீதி வேண்டும் போன்ற பதாதைகளை தாங்கியவாறும் கசிப்பு மற்றும் போதைவஸ்தை இல்லாமல் செய், நீதி வேண்டும் நீதி வேண்டும் மரணித்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக தாண்டிக்குளம், இரணைஇலுப்பைக்குள வீதி போக்குவரத்து தடைப்பட்டமையால் அவ்வீதியின் ஊடக பயணம் செய்யும் மக்கள் பாதிப்புக்குள்ளாகினர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் -

போதைப்பொருள் பாவனையாலே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. நாங்களும் வேலைக்கு சென்று 6 மணி போல் வரும் போது எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. தற்போது சதுமிதாவிற்கு நடந்த பிரச்சினைதான் இன்னொரு சிறுமிக்கும் நடைபெறும்.

குறித்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும். 18 வயதிற்குப்பட்ட குறித்த சிறுமியைத் துஸ்பிரயோகம் செய்தமையாலே மன ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கலாம். அத்துடன் குறித்த சிறுமியை சிறிய தந்தையாரே துஸ்பிரயோகம் செய்துள்ளார் எனத் தெரிவித்த ஆர்ப்பாட்டகாரர்கள் குறித்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும் எனத் தெரிவித்தார்.



ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் சிறுமியின் சிறிய தந்தை ஈச்சங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட நபரினை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதாகவும், இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களையும் கைது செய்வதாகவும் பொலிஸார் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டகாரர்கள் கலைந்து சென்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir



# செறிவூட்டப்பட்ட அரிசி பாடசாலைகளுக்கு

## வழங்கும் பணி ஆரம்பம்!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய பாடசாலை மாணவர்களுக்கு போசாக்குள்ள உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக உலக உணவுத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகம் வெள்ளிக்கிழமை வெயங்கொட உணவு களஞ்சிய வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலைமாணவர்களிடையே இரும்புச் சத்து குறைபாட்டைக் குறைக்கும் நோக்கில், பாடசாலை உணவுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுவதுடன், ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள உலக உணவுத் திட்டத்திற்கான கூட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.ஏ.எம்.ரிப்லானின் மேற்பார்வையில் இந்த விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்படி, முதற்கட்டமாக மாகாண மட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 735 மெற்றிக் தொன் அரிசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமானதுடன் இந்தப் பணிகள் தொடரும். சம்பந்தப்பட்ட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் பாடசாலைகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது.

இதேவேளை, மே 19ஆம் திகதி பாடசாலை புதிய தவணை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், 378.835 மெற்றிக் தொன் பருப்பு, 412.08 மெற்றிக் தொன் சூரியகாந்தி சமையல் எண்ணெய், 300 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என உலகக் உணவுத் திட்டத்திற்கான கூட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள தரம் 1-5 வரை உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலையில் ஒருவேளை உணவு வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. போசாக்கு நிபுணர்களின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு, மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் முன்னர், தினமும் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை காலை உணவு வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் ஊடாக 'ஆரோக்கியமான சுறுசுறுப்பான மாணவர் தலைமுறை' என்ற கருப்பொருளின் கீழ், 2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலை உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களிடையே போசாக்குப் பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர்களின் தினசரி பாடசாலை வருகையை அதிகரித்தல், நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்வி மேம்பாட்டு மட்டத்தை உயர்த்த பங்களித்தல் மற்றும் உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புதல் ஆகிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

9134 அரச பாடசாலைகளிலும், 100 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள அனைத்து ஆரம்ப வகுப்பு மாணவர்களையும் உள்ளடக்கிய இந்த ஆண்டு பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இதற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கு அரசாங்கம் நேரடியாக 16,600 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கியுள்ளதுடன், உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்க விவசாயத் திணைக்களம் உட்பட பல அமைப்புகளும் அனுசரணை வழங்குகின்றன. (05)

# சித்திரைக் கலை விழா

(கே எ ஹமீட்)

திருக்கோணமலை மாவட்ட தமிழ் அமுதம் கலைவட்டம் நடத்தும் சித்திரைக் கலை விழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் அமுதம் கலைவட்டத்தின் தலைவரும் அதிபருமான திருமதி சுஜந்தினி யுவராஜா தலைமையில் 'தமிழ் மணம் வீசட்டும்' எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இந்த சித்திரைக் கலை விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி த.வருணி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஶ்ரீபதி ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான திருமதி ஜெ.நித்தியானந்தன், ஓய்வுநிலை அதிபர்களான க.ஜெயநாதன், ப.மதிபாலசிங்கம், ந.நவரெத்தினராஜா, கெ.சித்திரவேலாயுதம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (05)

# கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையில் உணவு பாதுகாப்பு குறித்த மீளாய்வு கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



உணவு பாதுகாப்பு தொடர்பான வருடாந்த மாவட்ட மீளாய்வுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் மற்றும் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌசாத்தால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாடு நிருவாகப் பிரிவுக்கான சமுதாய மருத்துவ நிபுணர் வைத்தியர் பானுஜா, உணவுக் கட்டுப்பாடு நிருவாகப் பிரிவுக்கான சிரேஷ்ட உணவு மற்றும் மருந்து பரிசோதகர் ஜவாத் மரைக்கார் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்கள் பதிவு செய்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரிகளால் காத்திரமான விளக்கக்காட்சியுடன் கூடிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியா குருதிகொடை நிகழ்வு




வவுனியா வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டையடுத்து குருதி கொடை வழங்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல்கலைக் கழகம் ஒன்றில் வெள்ளிக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா, வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு காணப்படுவதாக வைத்தியசாலையினர் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல்கலைக் கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. இதில் இளைஞர், யுவதிகள் பலரும் தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05 - 100)

# தெவுந்தர கடற்கரையில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் பரிசோதனைக்கு

## அனுப்ப நீதிமன்றம் உத்தரவு

தெவுந்தர கடற்கரையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 380 கோடி ஷரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப் பொருள்களை அரசாங்க இரசாயன பகுப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது .

கடந்த 12ஆம் திகதி பத்து மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட 263 கிலோ கிராம் போதைப்பொருளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தெவுந்தர கடற்கரையிலிருந்து 246 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற்பரப்பில் வைத்து இந்த போதைப்பொருள் கையிருப்பு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீனவர்கள் மீது போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் கடத்தல் தொடர்பான வழக்கு எதிர்வரும் நாள்களில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 2 கடற்படையினர் உட்பட நால்வர் போதைப்பொருள்களுடன் கைது

சுமார் 7.5 மில்லியன் ஷரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கை கடற்படையின் இரண்டு லெப்டினனட் கமாண்டர்களும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

510 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் முல்லேரிய பிரதேசத்தில் வைத்து குறித்த குழுவினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வண்ணமயமான மலர்க் கண்காட்சி நுவரெலியாவில் கோலாகல ஆரம்பம்









எழில் கொஞ்சும் நுவரெலியா நகரில் வசந்த காலத்தையொட்டி வருடம் தோறும் நடைபெறும் மலர் கண்காட்சி நுவரெலியா மாநாகரசபை ஏற்பாட்டில் விக்டோரியா பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட மலர் கண்காட்சி நேற்று (சனிக்கிழமை) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் கண்டுகளித்து வருகின்றனர். ஏப்ரல் மாத வசந்த காலத்தில் ஒரு கட்டமாக வருடம் தோறும் குறித்த மலர் கண்காட்சி நடைபெறும் இரண்டு நாள்கள் தொடர்ந்து நடைபெறும். இம்மலர் கண்காட்சியில் விதவிதமான மலர்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட உருவ பொம்மைகள், மிருகங்களின் உருவம் காய்கறிகளின் உருவம் என பல வடிவங்களில் உருவ அலங்காரங்களும் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த மலர் கண்காட்சியில் அதிகமான அரச மற்றும் தனியார் பிரிவுகளிலிருந்து பல போட்டியாளர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர். இம்மலர் கண்காட்சிப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறுவோருக்கு இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை பணப்பரிசிலகளையும் சான்றிதழ்களையும் வழங்க ஏற்பாடு செய்யப்படுள்ளது.

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மலர் கண்காட்சியில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.பி. ரத்நாயக்க மற்றும் கண்டி இந்திய உயர் ஸ்தானிகர் வைத்தியர் எஸ். அதிரா மற்றும் நுவரெலியா மாநகரசபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமான, முன்னாள் மாநகரசபை முதல்வர்கள் , நுவரெலியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

எனவே நுவரெலியா வரும் சுற்றுலாப் பயணிகள், அழகை ரசிப்பதோடு இயற்கையையும் பாதுகாக்க வேண்டும் என மாநகரநபையினர் கோரிக்கையையும் முன்வைக்கின்றனர .(05)

## கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பெருநாள் புத்தாண்டு விழாக்கள்





(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் மற்றும் தமிழ் சிங்கள புத்தாண்டுகளை முன்னிட்டு இடம்பெற்ற விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை கற்பிட்டி பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ஜே.எம்.சமில இந்திக ஜயசிங்க தலைமையில் இடம்பெற்றது .

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் சுமார் 5 வருடங்களின் பின்னர் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ் விளையாட்டு விழாவில் பிரதேச செயலகத்தின் அனைத்து அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் என சகலரினதும் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுகளான முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், நீர் நிறைத்தல், யானைக்கு கண் வைத்தல் போன்ற பல்வேறு விளையாட்டுகளுடன் இலங்கையின் பாரம்பரிய நடன நிகழ்வும் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

அன்றைய தினம் மக்கள் சேவைக்கு எவ் வித இடையூறும் இன்றி நடைபெற்ற இந்நிகழ்வு இன,மதங்கள் கடந்து ஒற்றுமையை பறை சாற்றும் வகையில் இவ்வாறானதொரு விளையாட்டு விழாவை வேலைப்பழு நிறைந்த இக்காலப்பகுதியில் ஏற்பாடு செய்திருந்தமைக்காக கற்பிட்டியின் புதிய பிரதேச செயலாளர் ஜே.எம். சமில இந்திக ஜயசிங்கவை பாராட்டுவதுடன் தமது நன்றிகளையும் தெரிவிப்பதாக பிரதேச செயலக ஊழியர்கள் தெரிவித்தனர். (05)

## காரைதீவில் களைகட்டிய மரதன் ஓட்டம் சித்திரைப் புத்தாண்டு கலாசார விழா





(வி.ரி.சகாதேவராஜா)

குரோதி சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய 26 ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவின் காலை நிகழ்ச்சிகள் கழகத் தலைவர் வி.விஜயசாந்தன் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) காலை மரதன் ஓட்டத்துடன் சிறப்பாக ஆரம்பமாகியது.

காலை நிகழ்வான மரதன் ஓட்டம் கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் ஆரம்பிக்கப்பட்டு காரைதீவு விளையாட்டு கழக காரியாலயத்தில் நிறைவுபெற்றது.

கழக போசகர்களான சிவ.ஜெகராஜன், வே.இராஜேந்திரன், வே. த.சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

நான்கு கிலோமீற்றர் நீள மரதன் ஓட்டத்தில் ஏழு போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

காரைதீவு பொலிஸார் மற்றும் காரைதீவு பிரதேச வைத்தியசாலை உள்ளிட்ட நிறுவனாங்கள் ஆதரவளித்தன. கழக உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பளித்தனர்.

பெருந்திரளான மக்கள் வீதியோரத்தில் நின்று போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டினர். (05)

## காஸா சிறுவர் நிதியத்திற்கு தௌபீக் எம்.பி. நிதி உதவி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காஸா சிறுவர் நிதியத்திற்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தனது சொந்த நிதியிலிருந்து நிதி உதவிகளை வழங்கிவைத்தார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கிண்ணியா கிளையினூடாக இடம்பெற்றுவரும் நிதி சேகரிப்பு குழுவினரை சந்தித்து நிதி உதவிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## சகோதரியுடன் முறைகேடு அண்ணன் மீது குற்றச்சாட்டு

### மஸ்கெலியாவில் சம்பவம்

23 வயது வளர்ப்பு மகன் ஒருவர் தனது சகோதரியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மஸ்கெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரை வெள்ளிக்கிழமை ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பணித்து உள்ளார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

வியாழக்கிழமை மாலை சகோதரி மூலம் கிடைக்க பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்தே 23 வயது உடைய சந்தேக நபரை மஸ்கெலியா குற்ற தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது எனத் தெரிவித்தார். (05)

## கப்பல் மார்க்கமாக இலங்கைவரும் பயணிகளுக்கான ஒன்லைன் விசா

கப்பல் மார்க்கமாக இலங்கை வரும் பயணிகளுக்கு புதிய ஒன்லைன் விசா முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. நான்கு நாள்களுக்கு இந்த ஒன்லைன் விசா முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அதன் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம் நிமல் குணவர்தன தெரிவித்துள்ளார்.(05)

# அம்பேவெல பால் பண்ணையில் ஜனாதிபதி நேற்றுக் களப்பார்வை

உலகின் அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அம்பேவெலபால்பண்ணை குழுமத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று நேரில் அறிந்துகொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2022 டிசம்பர் மாதத்தில் அம்பேவெல பால் பண்ணைக்கு அவசர கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்ததுடன், அதன்போது வழங்கப்பட்ட பணிப்புரைகளின்படி, கடந்த ஆண்டு பண்ணையில் விரிவான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பண்ணை குழுமத்தின் பொது முகாமையாளர் சரத் பண்டார மற்றும் அதன் பணியாளர்கள் வரவேற்றனர். பண்ணையின் புதிய அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்த ஜனாதிபதி, கறவை மாடுகள் வைக்கப்பட்டுள்ள வளாகத்தையும் பார்வையிட்டார்.

அதன் பின்னர், ஊழியர்களுடன் சிறு உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அம்பேவெல பண்ணையின் பால் உற்பத்தித் துறையில் எட்டப்பட்டுள்ள படிப்படியான வளர்ச்சி மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பையும் பாராட்டினார்.

அதேபோன்று, பண்ணைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அந்த அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த விசேட அதிதிகள் புத்தகத்தில் ஜனாதிபதி குறிப்பு ஒன்றையும்எழுதியதோடு,பண்ணைஊழியர்களுடன் குழு புகைப்படமொன்றையும் எடுத்துக்கொண்டார். மேலும், வார இறுதி நாட்களில் பண்ணையை பார்வையிட வந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேரில் சந்தித்ததுடன், அவர்களின் விபரங்களை கேட்டறிந்து சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

1940 காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அம்பேவெல பண்ணை, 2001 ஆம் ஆண்டு தனியார் மயமாக்கப்பட்டதுடன், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான நவீனமயமாக்கல் காரணமாக, அது தற்போது இலங்கை மற்றும் தெற்காசியாவில் பால் உற்பத்தி மற்றும் பண்ணை தொழில்நுட்பத்தின் அதியுயர் தொழில்நுட்ப பாவனையுடன் கூடிய பிரதான மையமாக மாறியுள்ளதாக அம்பேவெல பண்ணை குழுமத்தின் பொது முகாமையாளர் சரத் பண்டார குறிப்பிட்டார்.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலத்திலிருந்துஇந்தப்பண்ணையின்அபிவிருத்திக்கு வழங்கிய ஆதரவைப் பாராட்டிய அவர், தொடர்ந்தும் பண்ணையின் செயற்பாடுகளைப் பார்வையிட வருகை தருவதையிட்டு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

2022டிசம்பர்மாதத்தில்ஜனாதிபதிபண்ணைக்குச் சென்றபோது, அதன் தினசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு சுமார் 40,000 லிட்டராக இருந்ததுடன், பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் காரணமாக இவ்வருடம்நாளாந்தம்52,000 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இது 30மூ அதிகரிப்பாகும் எனவும் சரத் பண்டார மேலும் தெரிவித்தார்.

பால் உற்பத்தித் திறனை படிப்படியாக அதிகரித்து ஆண்டுக்கு 20 மில்லியன் லிட்டர் பால் உற்பத்தி செய்ய பண்ணை குழு செயல்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கறவை மாடுகளில் உயர்தர வகைகளை இந் நாட்டிலேயே உருவாக்க அம்பேவெல குழுமம் தற்போது செயற்பட்டுள்ளதுடன், அந்த கறவை மாடுகளை பராமரித்தல், தேவையான உணவு நீராகாரம் வழங்குதல், எடையிடுதல், நோய் நிலைகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை கண்டறியும்போதே மாடுகளை பிரித்துவிடுதல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் தானியங்கி முறையில் இயந்திரங்கள் மூலம் நடைபெறுகின்றன.

கடந்த விஜயத்தின்போது ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையின்பிரகாரம்இலங்கைப்பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுப் பணிகள் மற்றும் அனுபவத்திற்காக இந்தப் பண்ணை திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், மாதிரி பண்ணையாக மற்றுமொரு பண்ணை பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் உட்பட எவரும் அங்கு வருகை தந்து மாதிரிப் பண்ணை அனுபவத்தைப் பெற முடியும் எனவும் சரத் பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான பொருளாதார வேலைத்திட்டத்துடன், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுள்ளதாகவும், அம்பேவெல பால் பண்ணைக்கு நாளாந்தம் அதிகளவான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும் சுட்டிக்காட்டிய சரத் பண்டார, பல வருடங்களின் பின்னர் ஒரே நாளில் அதிகளவான 9,000 சுற்றுலாப் பயணிகளின் வருகை இவ்வருடம் ஒரே நாளில் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பண்ணைக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இவ்வருடம் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சரத் பண்டார மேலும் தெரிவித்தார்.

# அன்று செய்த தவறை ஜேவிபி இன்றும் திரும்பச் செய்கின்றது

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

நாட்டைக் காப்பாற்ற வருவோம் என்று தம்பட்டம் அடித்தவர்கள் அன்று 60,000 இளைஞர்களின் உயிர்களை பறித்தவர்கள். ஆனால் இன்று இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குச்செல்வதைத் தடுப்பதன் மூலம் அன்று செய்த தீங்குகளை மக்கள் விடுதலை முன்னணி இன்றும் செய்துவருகிறது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

உமண்தாவபௌத்தஉலகளாவிய கிராமத்தில் நடைபெற்ற இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழில் வாய்ப்புகளுக்காகத்தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கான முதலாவது வதிவிட பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டுகருத்துதெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம் மூலம் இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலை செய்பவர்களுக்கு விரிவான பயிற்சி மற்றும் மன உறுதியை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சவால்களை எதிர்கொண்டு தமது பணிகளை வெற்றிகரமாகச் செய்வதற்கும் நாட்டிற்கு மீள வந்த பின்னர் தொழில்முனைவோராக வெற்றிபெறுவதற்குத் தேவையான பயிற்சிகள் இங்கு வழங்கப்படும்.

எங்களின் முதன்மை நோக்கம் விவசாய தொழில் மற்றும் நிர்மாணத்துறை பயிற்சி அளிப்பதன் மூலம் வாழ்க்கையை கற்பிப்பதாகும். நாட்டில்விவசாயத்தொழிலுக்குபயிற்சி அளிக்க பல நிறுவனங்கள் உள்ளன. இருப்பினும் நீங்கள் வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் எதுவும் இல்லை. மனிதவளத்தை உருவாக்க வேண்டும் என்றால் அதற்கான ஒரே இடம் உமண்தாவ என்று முடிவுசெய்தோம். தேவையான ஒழுக்கமானசூழலும்மனவலிமையை அளிக்கக்கூடிய சூழல் இங்கு உள்ளது.

விவசாயத் தொழில் எப்படி நவீனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கு அனுபவபூர்வமாக காண முடிகிறது. பரந்துவிரிந்தஅறிவைஇங்கு பெற்றுக்கொள்ள முடியும். இஸ்ரேல் உட்படபலநாடுகளுக்குஇளைஞர்களை அனுப்புகிறோம். இவர்கள் வெளிநாடு சென்று திரும்பி வர வேண்டிய சூழலை உருவாக்க விரும்புகிறோம், பணத்தைப் மாத்திரம் தேட வல்ல , தோல்வியடையாது வாழ்க்கையை வெல்லும் குழுவாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே இத்திட்டத்தை இன்று ஆரம்பிக்கொறோம்

இதுவே சமூக முன்னேற்றத்தின் ஆரம்பம். இந்த நாட்டை தொழிலதிபர்கள், இந்த மண்ணை நேசிக்கும் மக்கள் நிறைந்த நாடாக மாற்றும் வேலைத்திட்டத்தின் அழகுதான் இன்று இங்கு நடக்கிறது.

இந்த நாட்டில் இளைஞர்கள் மற்றும் கல்வி தொடர்பில் பாரிய பிரச்சினை உள்ளது. ஆனால் நாட்டில் கல்வி சிந்திக்கக்கூடியவர்களை உருவாக்கவில்லை. நமது கல்வி சிந்திக்க முடியாத சிலரை உருவாக்குகிறது, பின்னர் உயர்கல்வி மனப்பாடம் செய்யும் ஒரு குழுவை உருவாக்குகிறது.

மேலும், கற்பனையே இல்லாமல் வெறும் மிதக்கும் ஒரு சிலரை ஊடகங்கள் உருவாக்கும் போது, நம்மால் முடிந்தவரை மக்களை மாற்ற முயல்கிறோம். அதற்கிணங்க இந்த நாட்டைமாற்றியமைத்துகட்டியெழுப்பி ஒருதேசமாகநாம்வெற்றிப்பயணத்தை ஆரம்பிக்கின்றோம்

நாட்டுத்தொழிலாளர்களைவெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடாது என்று பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்படும் இவ்வேளை இதனை தேசியப் பொறுப்பாக கருதுகிறோம். அண்மைக் காலத்தில், 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டுத் தொழிலாளிகளால் அந்நிய செலாவணியாக நாட்டிற்கு கொண்டு வர முடிந்தது.

நாட்டுக்குதேவையானஎண்ணெய் மற்றும் எரிவாயு கிடைப்பது கடினமாக இருந்தது. ஆனால் மற்றொரு குழு வெளிநாட்டு தொழிலாளர்களிடம் நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என்று கூறியது. ஆனால்நாம்நாட்டின் நிலைமையை மாற்றியுள்ளோம் என்றார்.

# கிளிநொச்சி விவசாயப் பயிற்சி நிலைய விற்பனை நிலையம் திறந்து வைப்பு

*வட்டக்கச்சியில் அமைந்துள்ள, கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விற்பனை நிலையம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

*குறித்த விற்பனை நிலைய விற்பனை செயற்பாடுகளை மதியம் 12.00 மணிக்கு வட மாகாண விவசாய பணிப்பாளர் சு. செந்தில்குமரனால் தொடங்கி வைக்கப்பட்டது.*

*இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*இவ் விற்பனை நிலையம் ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் அதாவது கிழமை நாள்களில் காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணிவரை, சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரைவிற்பனை செயற்பாடுகள் இடம்பெறும்.*

*மேலதிக விவரங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளரை 077-3028270 அல்லது 071-3028270 தொலைபேசி இலக்கமூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (05-316)*

# தாய் மற்றும் சகோதரனைத் தாக்கிய இளைய சகோதரனுக்கு விளக்கமறியல்

மஸ்கெலியாவில் கோடரியால் தாய் மற்றும் சகோதரனை தாக்கியதாக கூறப்படும் இளைய சகோதரன் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோடரி தாக்குதலில் 72 வயது உடையதாய்மற்றும்44வயதுஉடைய சகோதரன் படுகாயமடைந்த நிலையில் கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்றுள்ளது என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.புஸ்பகுமார தெரிவித்தார்.

பொறுப்பதிகாரிமேலும்கூறுகையில் இச்சம்பவம்மஸ்கெலியாபொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட எமலீனா பிரிவில் வெள்ளி மாலை 4 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் 119 பொலிஸ் அவசர அழைப்புக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு அதிகாரி மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அங்கு சந்தேக நபரர் கைது கைது செய்யப்பட்துடன், தாக்குதலுக்குள்ளான இருவரை 1990 அம்புலன்ஸ் ஊடாக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹற்றன் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தபட்ட போது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், இக்கால கட்டத்தில் சந்தேக நபரை மன நோயாளர் வைத்திய அதிகாரி முன்நிலைபடுத்தி வைத்திய அறிக்கை பெறுமாறுநீதிவான்பணித்துள்ளார்.(05)

## ராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படிப்படியாக வரி வருவாயை அதிகரித்துள்ளோம். வரி செலுத்துவதிலிருந்துவிலக்குகளை அகற்றியுள்ளோம்.

வரி இணக்கத்தை வலுப்படுத்தியுள்ளோம். 2023ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி அரசாங்கத்தின் வருமானம் 11 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது அரசாங்கத்தின் வருமானத்தில் 8.1 சதவீதமாகும்.

2024இல்அந்தஎண்ணிக்கை 12 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கிறோம். அந்த இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்குள்ளது. தற்போது வரி விதிப்பின்மை 130 சதவீதத்தை எட்டியுள்ளது. வரி பதிவும் அதிகரித்துள்ளது. நல்ல மதிப்பாக இருந்தாலும் அதில் திருப்தி அடைய முடியாது. வரி செலுத்த வேண்டிய அனைவரையும்வரிசெலுத்துமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம் என்றார்.

# புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜித் ஏற்பாட்டில் சிறப்பு பட்டிமன்றம்

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம்ஸாலிஹீன்மஸ்ஜித் நிர்வாகம், தமது இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு சுவாரஸ்யமான விவாத அரங்கு ஒன்றினை ஏற்பாடுசெய்துள்ளது.

இந்த விவாத அரங்கு 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 08 மணிக்கு ஸாலிஹீன் மஸ்ஜிதுக்கு முன்பாக அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்றைய புத்தளத்தில் இல்லாமல் போயிருப்பது தட்டிக்கொடுத்தலா..? அல்லது தட்டிக்கேட்டலா..? என்பது விவாத அரங்கின் தலைப்பாகும்.

இன்றைய புத்தளத்தில் இல்லாமல் போயிருப்பது 'தட்டிக் கொடுத்தலே' என்ற அணி சார்பாக ஏ.எம்.மிஹ்லார் முஹம்மது, ஆசிரியர்ஏ.எம்.பஸீல், அஷ்ஷெய்க்பீ.எம்.ஜிப்னாஸ்(அல் மிஸ்பாஹி) ஆகியோர் வாதாட உள்ளனர்.

இன்றைய புத்தளத்தில் இல்லாமல் போயிருப்பது 'தட்டிக்கேட்டலே'என்ற அணி சார்பாக ஹிசாம் ஹுசைன், எம்.ஆர்.எம்.ஷவ்வாப், ஏ.அர்ஷாத் அலிஆகியோர்வாதாடஉள்ளனர்.

இச்சிறப்புப் பட்டிமன்ற நடுவராக, கவிஞர் 'புத்தளம் மரிக்கார்' தலைமை தாங்க உள்ளார்.

பெற்றார்கள், மாணவர்கள், இளைஞர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டு குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (05)

# கல்முனை கல்வி,கலாசார மேம்பாட்டு தாபனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி, கலாசார மேம்பாட்டு தாபனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும்புதியநிர்வாகத் தெரிவு தாபனத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டில் தாபனத்தால் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ள நிகழ்சித்திட்டம்தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. (05)

## 3 பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயதுச் சிறுவன் சாவு

ரம்பே - மல்சிரிபுர வீதியில் பன்சியகம பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 16 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கலடன்வெள பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவனாவார்.

இவர் மூவருடன் மோட்டார்சைக்கிள் ஒன்றில் பயணித்துள்ள நிலையில் குறித்த மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுவனும் மற்றுமொரு நபரும் காயமடைந்த நிலையில் பொல்பிதிகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

பொல்பிதிகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## லொறியில் கைப்பை சிக்கியதால் கீழே வீழ்ந்த பெண் மோதுண்டு சாவு

நிட்டம்புவ, வத்துபிட்டிவல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் கைப்பை லொறியில் சிக்கியதால் லொறியில் மோதிப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியில் கைப்பை சிக்கியதில் மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்த பெண் அதே லொறியால் மோதப்பட்டே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த பெண் 54 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.04.2024இல் வெளியிடப்பெற்றது